Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-68 புரட்டாதி, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00

# நினைவேந்தல் ஊர்தியும் ஏற்படுத்தப்பட்ட தடைகளும்



- இயற்கை வழியில் நெற்செய்கை
- கையேந்தும் நிலைக்கு தள்ளப்படுகிறதா வடக்கு கடற்தொழில் சமூகம்
- பொறுப்புக் கூறல் விடயத்தில் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காத அரசு

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# இயற்கை வழியில்

# நெற்செய்கை



தொகுப்பு - ரஜீந்தினி

நெற்செய்கை தொடர்பிலும், பலபயிர் சாகுபடி தொடர்பிலும் விவசாய திணைக்களத்தின் பண்ணை ஒலிபரப்பு சேவையின் நேரலைக்கு கடந்த 14.07.2023 அன்று தமிழ்நாட்டு சூழலியலாளர் இயற்கை விவசாய விஞ்ஞானி ரேவதி அவர்கள் வழங்கிய தகவல்களின் முக்கிய பகுதிகளின் இரண்டாம் பகுதியை இங்கே தருகிறோம்.

நாங்கள் 2005 களில் இருந்தே நிறைய நெற்செய்கை விவசாயிகளுடன் பயணம் செய்திருக்கிறோம். மேட்டு நிலத்தில், தண்ணீரே இல்லாத நிலத்தில் கூட நெற்செய்கையை எப்படி செய்வது என்று நாங்கள் கருத்து பரிமாற்றம் செய்திருக்கிறோம். அந்த விவசாயிகள் அதனை செய்தும் காட்டி இருக்கிறார்கள். நிறைய முற்போக்கு விவசாயிகளை நாங்கள் இந்த பயணத்தில் கண்டிருக்கிறோம். மிகவும் நம்பிக்கை தரக் கூடியதாக அந்த பயணம் இருந்தது.

நெற்செய்கையை பொறுத்தளவில் முக்கியமாக மூன்று விடயங்களை நாங்கள் சொல்கிறோம். நிலத்தை தயார் செய்யும் போது எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிலத்தை சமப்படுத்த வேண்டும். நிலம் மேடு பள்ளங்கள் இல்லாமல் சீராக சமமாக இருந்தால், தண்ணீர் தேங்காமல் இருந்தாலே அங்கு விதைக்கக்

கூடிய ஒவ்வொரு விதையையும் நாங்கள் காப்பாற்ற முடியும். அதனை முதலில் இருந்து அறுவடை வரைக்கும் கொண்டுவர முடியும். ஆகவே நெற்செய்கையில் முக்கியமானதாக நாங்கள் கருதுவது சமமான பலகை போன்ற நிலப்பரப்பு. அது எவ்வளவு தூரம் சாத்தியமோ அவ்வளவு தூரம் அதனை செய்ய வேண்டும்.

இரண்டாவது அடிப்படை தேவை விதைகள். தேர்ந்தெடுக்கப்பட்ட விதைகளை நாங்கள் பயன்படுத்த வேண்டும். முளைப்புத்திறனை சான்றுபடுத்திய விதைகளை கடைகளில் வாங்கலாம். அல்லது அவை எங்களிடம் இருக்கலாம். ஆனால் அதற்கும் மேலாக சரியான நிறை உடைய விதைகள் எங்களுக்கு தேவை. எல்லா விதைகளும் தேர்வு செய்யப்பட்ட விதைகளாக இருந்தால் நல்லது. அதாவது 22mg நிறையுள்ள விதைகளாக எடுத்தால் நல்லது. ஆனால் அவ்வாறு தேர்ந்தெடுப்பது சாதாரண விடயம் அல்ல.

அதற்கென நாங்கள் ஒரு எளிமையான முறையை வடிவமைத்து இருக்கிறோம். 15 லீற்றர் தண்ணீரில் 1 லீற்றர் உப்பை கலந்து அதன் அடர்த்தியை கூட்டி ஒரு திரவத்தை தயார் செய்கிறோம். அதில் ஒரு முட்டையை வைத்தால் அந்த முட்டை மிதக்க வேண்டும். பிறகு விதைக்க வேண்டிய நெல்லை அதிலே கொட்டி நன்றாக கலந்தால் அவற்றில் எவை அதிக நிறையை கொண்டு இருக்கின்றனவோ அவை கீழே போய் விடும்.

நிறை குறைவாக இருக்கின்ற விதைகளும் முளைக்க கூடும். ஆனால் நாங்கள் எதிர் பார்க்கின்ற விளைச்சலை தராது. அதனால் நிறை குறைவான நெல்லை தவிர்த்து அடர் திரவத்தில் கீழே படிந்து இருக்கின்ற நெல்லை எடுக்கிறோம். அவற்றை உடனடியாக நன்னீரில் கழுவுகிறோம். நோய்கள் தாக்காதவாறு சூடோமோனஸ் நுண்ணுயிர் கரைசலிலோ அல்லது நாங்களே தயாரித்து வைத்திருக்கின்ற நுண்ணுயிர் கரைசலிலோ அந்த நெல்லை அரைமணி நேரம் ஊற வைத்து விடுகிறோம். இதனால் அந்த விதைகளுக்கு உயிராற்றல் தூண்டப்படுகிறது. அதற்கு எந்தவிதமான பூஞ்சை நோயோ அல்லது பூச்சி தாக்குதலோ ஏற்படாத வண்ணம் ஒரு காப்பாக இருக்கிறது.

இப்பொழுது நிலமும் தயார், விதைகளும் தயார். அடுத்து நாங்கள் வரிசை நடவினை அறிமுகப்படுத்துகின்றோம். எங்களுடைய பகுதிகளில் நாங்கள் ஏக்கர் ஒன்றுக்கு 5 கிலோ விதை நெல்லை மட்டுமே பயன்படுத்துகிறோம். ஏனென்றால் இவ்வாறு தேர்ந்து எடுக்கப்பட்ட விதை நெல் வரிசை நடவு செய்யும் போது இடைவெளிகள் சீராக இருப்பதனால் நிறைய தூர் வைக்கும். வேகமாக 45 நாட்களுக்குள் இடைவெளி மூடப்பட்டு விடும். தூரடிப்பது வேகமாக நடப்பதனால் நெருக்கி நட வேண்டும் என்கிற அவசியம் இருக்காது. நெருக்கி நடுவதனால் கிடைக்கின்ற பயன்களை விட அதிகமான தூர்களையும் அதிகமான விளைச்சலையும் எடுத்து பலமுறை நிரூபித்து இருக்கிறோம். இந்த மூன்று விடயங்களும் அடிப்படையானவை.

அடுத்து, வரப்புக்களை சுத்தம் செய்தல் முக்கியமானது. நான் பார்க்கின்ற ஒவ்வொரு இடத்திலும் வரப்புக்களை நன்றாக வெட்டி கட்டி செய்கிறார்கள். பின்னர் புல்லும் குப்பையுமாக காணப்படுகின்றன. அங்கு வளரும் அறுகு, கோரை போன்ற புல்வகைகள் பூச்சிகள் வந்து இருப்பதற்கு அடித்தளமாக இருக்கின்றன. அங்கு பூச்சிகள் இருந்து வளர்ந்து பெருகி நெல் விளைந்ததும் புல்லில் இருந்து நெல்லிற்கு தாவி எங்களுக்கு பொருளாதார சேதத்தை ஏற்படுத்துகின்றன. ஆகவே நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னரே வரப்பை சுத்தம் செய்து விட்டு அந்த வரப்பில் அவரை, துவரை, கடலை, உளுந்து, பயறு இது போன்ற பயிர் வகை செடிகளை வளர்க்க வேண்டும். இவற்றின் இலைகள் மென்மையாக இருப்பதனால் பெரும்பாலான பூச்சிகள் நெல்லை தவிர்த்து இச் செடிகளுக்கு போய்விடுகின்றன. அங்கு தீமை செய்கின்ற பூச்சிகள் உட்கார்ந்து சாப்பிட வரும் போது ஏனைய இரை விழுங்கி பூச்சிகள் அவற்றை வேட்டையாடுகின்றன.

மேலும், பூச்சிகளை பிடிக்க கூடிய பறவைகள் உட்காரும் வகையில் தென்னை மட்டை, பனை மட்டை போன்றவற்றை ஒரு

( 13 ஆம் பக்கம் பார்க்கவும் )

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## மக்களை ஓரணியில் திரட்டும் தேசியத்தின் குறியீடே திலீபம்

சிறீலங்கா ஒரு அதிசய தீவாகவே என்றைக்கும் இருக்கிறது. இங்கே இருக்கும் பொலிஸாரும் நிச்சயமாக ஆச்சரியமானவர்கள் தான். தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் அனுட்டிக்கப்படும் வேளையில் கிழக்கிலிருந்து திலீபன் நினைவு ஊர்திப் பவனி ஒன்று திருகோணமலை நோக்கி வரும் போது சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டிருந்தது.

அமைதி வழியில் ஊர்திப் பவனியில் சென்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட தமிழ் இளைஞர்கள் பலர் கொடூரமாக தாக்கப்பட்டிருந்தனர். இதன் பின்னணியில் காடையர்களுக்கு மூளையாக செயல்பட்டவர் பிக்கு ஒருவர் என்றே கூறப்பட்டது. இன்னொரு இனக்கலவரத்துக்கான ஒத்திகையாகவே அது பார்க்கப்பட்டது. கண்துடைப்புக்காக ஆறு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். அந்த பொலிசாரே அவர்களை பிணையில் விடுமாறு கோரி சட்டத்தை கேலிக்கு உள்ளாக்கும் நடவடிக்கையையும் எடுத்திருந்தனர். குறித்த பிக்கு தான் கலவரத்துக்கு காரணமானவர்களை வெளியே எடுக்க ஒற்றைக்காலில் நின்று பிணையும் எடுத்துள்ளார். அவருக்கு திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பொலிஸாரும் துணை போயிருக்கிறார்கள். ஆனால், திலீபன் நினைவு ஊர்தியால் கலவரம் வரும் அதனை தடை செய்யுங்கள் என ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றங்களையும் நாடும் பொலிஸார், அமைதி வழியில் சென்ற தமிழர்களை கொடூரமாக தாக்கிய சிங்கள காடையர்களை விடுவிக்கவும் அதே காரணத்தை கூறியுள்ளமை தான் ஆச்சரியத்தின் உச்சம். காடையர்களை தொடர்ந்தும் தடுப்பில் வைத்திருந்தால் இனக்கலவரங்கள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற வாய்ப்புள்ளதாக நீதிமன்றில் தெரிவித்திருக்கிறது பொலிஸ். திட்டமிட்டு வன்முறையை ஏற்படுத்திய காடையர் கும்பலுக்கு தைரியம் கொடுத்திருக்கும் பொலிஸார், தமிழர் மீது எத்தகைய வன்முறைகளையும் புரியலாம் பின் அதிலிருந்து பொலிஸாரே எம்மைக் காப்பார்கள் என்ற அசட்டு துணிச்சலை சிங்கள காடையர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் ஆறு காடையர்கள் ஆறாயிரமாக பெருக வழிவகுத்துள்ளார்கள்.

சிங்களவருக்கு ஒருமுகமும் தமிழர்களுக்கு இன்னொரு முகமும் காட்டும் இந்தப் பொலிஸார் தான் சிறீலங்காவில் சட்டம் ஒழுங்கை சரியாக நிலைநாட்டுவார்கள் என்று இனியும் நம்புகிறீர்களா? தமிழர் தரப்பு உள்நாட்டு நீதியை நம்ப தயாரில்லை, சர்வதேச விசாரணை கேட்பதும் இதற்காக தான். இன்னொரு பக்கம் இப்படியான வன்முறைகள் தமிழ் சமூகத்தை ஒன்றாக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இச் சம்பவத்தின் பின்னராக திருகோணமலையில் நிகழ்ந்த சிவில் சமூக பிரதிநிதிகளுடனான உரையாடல் ஒன்றில் தமிழ்த் தேசியம் சார்ந்து இயங்கும் அமைப்பொன்று அகிம்சையின் குறியீடாக விளங்கும் திலீபனின் நினைவேந்தலை அனுட்டிக்க தாங்கள் தயாரில்லை என கையை விரித்திருக்கிறது. திலீபனின் நினைவேந்தல் தமிழ் மக்களின் அடிப்படை உரிமை, அந்த உரிமை பறிக்கப்படுவதற்கு எதிராக போராடுவது ஒவ்வொரு தமிழரினதும் கடமை என்பதை இந்த போலி தமிழ்த் தேசியவாதிகள் உணர மறுக்கிறார்கள். இன்றும் தமிழ் மக்களை ஒன்றாக்கும் சக்திகளில் ஒன்றாக திலீபனின் நினைவேந்தல் விளங்குகிறது என்பதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகள் இன்றும் நிறைவேற்றப்படாமலே உள்ளன. அதிலும் அவரது முக்கிய கோரிக்கையான வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இன்று உச்சத்தை அடைந்துள்ளன. இந்நிலையில் கிழக்கிலிருந்து ஊர்தியை கொண்டு வந்தது பிழை, திருகோணமலைக்கு ஊர்தியை கொண்டு வந்து அந்த மக்களின் பாதுகாப்போடு விளையாடுவதா? என்றெல்லாம் சமூக வலைத்தளங்களில் கதைகளை எழுதுபவர்களை எண்ணி யாரை நோக?

இந்த ஊர்தியால் தான் திருகோணமலை மக்களின் பாதுகாப்புக்கு பங்கம் விளைந்தது என்பவர்கள் இந்த வருடத்திலேயே அவ்வப்போது திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவரால் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட செய்திகளை மீள வாசிக்க வேண்டும். முக்கியமாக சிங்கள குடியேற்றங்களால் தமது வாழ்வாதாரங்களை இழந்து கொண்டிருக்கும் கிழக்கு தமிழ் மக்களின் பகுதிகளினூடாக அது அவர்களின் பூர்வீக நிலம் என்பதை அடையாளப்படுத்துவதற்கு இது போன்ற ஊர்திகள் மேலும் மேலும் கொண்டு செல்லப்பட வேண்டும். அதனை கிழக்கு மக்களே முன்னெடுக்க வேண்டும்.

-செ. கிரிசாந்-

# கையேந்தும் நிலைக்கு தள்ளப்படுகிறதா வடக்கு கடற்தொழில் சமூகம் ?



செல்வின் இரேணியேல்

வடபகுதி கடல் வளம் இன்று அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் வட பகுதி மீனவர்கள் அல்ல. அவர்கள் கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு மேலாக கடல் வலய தடைச்சட்டத்தின் மூலம் கடலுக்கு போக முடியாமல் இருந்தவர்கள். அதனால் கடலுக்கு மீண்டும் தன்னை புதுப்பிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. எனவே கடல் வளம் மிகப்பெரிய அளவில் பெருகி இருக்க வேண்டும். அந்த கடல் வளம் இன்று வலுவிழந்து போகின்றது என்றால் அதற்கிடையில் வேறு எதுவோ நடந்திருக்கிறது. தமிழ்நாட்டினுடைய இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு தான் அது.

பணத்துக்காக பேராசைப்பட்டு இன்று பாரிய இழுவைப்படகுகள் ஒன்றல்ல இரட்டை மாட்டுவண்டி என்று மீனவர்கள் சொல்லும் இரட்டை படகுகளை பூட்டி கடலின் நிலத்தை வலை போட்டு அடியோடு இழுத்து கொண்டு போவதன் மூலம் கடல் வளம் அழிக்கப்படுகிறது. இந்திய மீனவர்களுக்கு இலங்கை கரையை ஒட்டிய கடல்களில் பாரம்பரியமாக மீன் பிடிக்க உரிமை இருக்கின்றது என்று சொன்னால் நாங்கள் அதை சாதகமாக அணுகலாம்.

ஏனெனில் 1983 ஆம் ஆண்டு வரையில் எமது மீனவர்களும் இந்திய கரைக்கு சென்று மீன் பிடித்தவர்கள் தான். இந்திய மீனவர்களும் இங்கு வந்து மீன் பிடித்தார்கள். ஆனால் அங்கு பாவிக்கப்பட்ட முறைகள் மரபு சார்ந்த இயற் கையோடு ஒன்றித்த தொழிற்பாடு முறைகள்.

இழுவை மீன்பிடித் தொழிலில் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று கடல்நில இழுவை (Bottom Trawler, பொட்டம் ரோலர்) என்று சொல்வார்கள் Bottom Trawler என்பது இழுவை மடிகள் என்று சொல்லப்படுகின்ற மிகப்பெரிய பை போன்ற வலையை பயன்படுத்துவது. அந்த பையினுடைய கீழ் பக்கத்தில் இரண்டு தகடுகள் பாரமாக பூட்டப்பட்டிருக்கும். அதை கடலில் இறக்கியவுடன் அந்த இரண்டு இரும்புகளும் கடலின் அடியில் நில மட்டத்தில் அமர்ந்து விடும். மிகவும் பலமான இயந்திரங்களை பூட்டி அந்த வலையை இழுக்கும் போது அது கடலின் அடிப்பரப்பில் இருக்கின்ற எல்லாவற்றையும் இடையூறு செய்து கொண்டு தான் இழுபட்டுப் போகும்.

வட பகுதியில் தற்பொழுது குருநகர் பகுதியில் மீனவர்கள் இழுவைப் படகுகள் வைத்திருக்கின்றார்கள். இவர்களிடம் உள்ள இழுவைப் படகுகள் அவர்களது கூற்றுப்படி கடல் நிலத்தின் அடியை இழுத்து கொண்டு போகுமளவிற்கு அதிக வலு கொண்ட இயந்திரமோ படகுகளோ இல்லை. எனவே அவர்களால் அப்படியான தொழிலை செய்ய முடியாது என்பது அவர்களுடைய வாதம். அவர்களுடைய இழுவை வலைகளில் போடுகின்ற பலகைகள் இடை நீரில் மிதந்து கொண்டு போகும். எனவே நிலத்தில் இருந்து சில அடிகள் மேலே போய்க் கொண்டு இருப்பதனால் பெரும்பாலும் நிலத்தை சிதைக்காது என்று சொல்லப்படுகிறது.

ஆனால் இழுவை மடிகள் என்று சொல்லப்படுகிற மிகப்பெரிய உறை கடலுக்குள் ஓடி வரும் பொழுது எல்லா வகையான மீன்கள் சிறிய குஞ்சுகள் எல்லாவற்றையும் இழுத்து கொண்டு வரும். இழுவை முடிந்து படகுக்குள் மீன்களை சேகரிக்கும் போது இவர்கள் தங்களுக்கு தேவையானவற்றை எடுத்து விட்டு மிகுதியை இறந்த நிலையிலோ அல்லது பாதிக்கப்பட்ட நிலையிலோ கடலுக்குள் எறிந்து விடுவார்கள். எனவே சிறிய மீன்கள் எல்லாம் அழிந்து விடும். எனவே கடல் வளம் என்கின்ற விடயத்தில் இழுவை தொழில் என்பது உண்மையில் எந்த விதத்திலும் பொருத்தமற்றது.

கடலில் தொழில் செய்கின்ற வலைகள், கருவிகள் சம்பந்தமாக உலக உணவு ஸ்தாபனம் மீன்பிடியோடு தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு மிக தெளிவான வரையறைகளை கொடுத்திருக்கிறது. எவற்றை பிடிக்கலாம் எவற்றை பிடிக்க கூடாது. எத்தனை அங்குல வலைகளை என்னென்ன நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டும் போன்ற பல்வேறு விடயங்களை தெளிவாக வரையறுத்திருக்கிறார்கள். நோர்வே போன்ற சில மேற்கத்தேய நாடுகளில் ஒரு படகு ஆகக் கூடியது எவ்வளவு கிலோ மீன் பிடிக்கலாம் என்பது கூட வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மேலே அவர்கள் பிடிக்ககூடாது. நியமங்கள் தெளிவாக பேசப்பட்டு இருக்கின்றன.

அப்படியிருக்கும் போது நாங்கள் இங்கு எங்களுடைய இயற்கை வளத்தை கண் மூடிக் கொண்டு அழிப்பவர்களை தடை செய்ய மறுக்கின்றோம். வாயால் தடை செய்வதாக கதைக்கின்றோமே தவிர அவர்கள் இங்கு வந்து செய்வதை பார்த்து கொண்டு இருக்கிறோம். எங்கள் மீனவர்களை துன்பத்தில் ஆழ்த்துகின்றோம். அல்லது தேவையில்லாமல் இரண்டு பக்கத்து கரைகளிலும் உள்ள மீனவர்கள் மத்தியில் முரண்பாடுகளை தூண்டுவதன் மூலம் ஈழத்தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் இடையிலான உறவுகளில் சேதாரத்தை ஏற்படுத்துகின்றோம்.

தமிழ்நாட்டிற்கும் இலங்கை தமிழர்களுக்கும் இடையில் உள்ள உறவுகளை ஏதோ ஒரு வகையில் சீர்குலைக்க வேண்டும் என்ற நிகழ்ச்சி திட்டத்தின் ஓர் அங்கமாக தான் இந்த இழுவைப் படகுகளை அனுமதிக்கின்ற ஒரு விடயம் நடக்கின்றதா என்று கூட கேட்க வேண்டி இருக்கிறது.

மறுபக்கத்தில் இழுவை மீன்பிடித்தொழில் இலங்கையில் முழுமையாக தடை செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று சுருக்கு வலை தடை செய்யப்பட்டிருக்கிறது. மின்சாரம் பாவித்து மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டிருக்கிறது. வெடி பொருட்களை பாவித்து மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு விதமான விடயங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஆனாலும் இன்றும் இத்தகைய தொழில்

> யுத்தத்திற்கு முன்பு இலங்கையின் மீன்பிடி தேவையில் மூன்றில் ஒரு பங்கை நாளாந்தம் வழங்கி கொண்டிருந்த ஒரு மாவட்டம் யாழ்ப்பாணம். இன்று தனக்கு தேவையான உணவை கூட பெற முடியாமல் அதன் பொருளாதாரம் சிதைக்கப்பட்டிருக்கிறது.

களை முல்லைத்தீவு, வடமராட்சி, கிழக்கு, மன்னார் போன்ற பல இடங்களில் பலர் செய்கின்றனர். மீனவர்களின் கருத்துப்படி அவர்கள் மிகவும் செல்வாக்கு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மீது சட்டத்தின் கரங்கள் இறுகுவதில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அப்படியென்றால் அர்த்தம் என்ன? நாங்களே ஒரு பக்கத்தால் சட்ட விரோதமான தொழிலை செய்வதற்கு மீனவர்களுக்கு சலுகை அளிக்கின்றோமா? செல்வாக்கு கொண்டவர்களை பாதுகாப்பதற்காக சட்டங்கள் மௌனமாகி போகின்றனவா? பல கேள்விகள் இருக்கின்றன.

இந்த விடயத்தில் எந்தவொரு தெளிவுமற்ற ஒரு நிலைமை தான் காணப்படுகின்றது. அண்மையில் கூட வடமராட்சி கிழக்கை சேர்ந்த மீனவ சங்க தலைவர் சொல்லி இருந்தார், இந்த சுருக்கு வலை மீன்பிடி செய்பவர்களில் சில கட்சி அங்கத்தவர்கள் கூட இருக்கிறார்கள் என்று. கட்சியின் அங்கத்தவராக இருப்பது எங்களுக்கு பிரச்சனை அல்ல. ஒவ்வொரு மனிதனும் ஒரு அரசியல் கட்சியுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளலாம். அதற்காக அவனையும் அந்த கட்சியையும் ஒன்றுபடுத்த கூடாது. ஆனால் கடல் வளத்தை சேதப்படுத்தும் செயற்பாட்டுக்கு ஒரு கட்சி பாதுகாப்பு வழங்குவதோ அல்லது கட்சி தான் அதை செய்வதாகவோ இருக்க கூடாது. ஆனால், ஏதோ ஒரு விடயம் மீனவர்கள் கட்சியை குறிப்பிட்டு கூறுகின்ற அளவுக்கு நெருடுகின்றது தானே. இந்த சட்டவிரோத தொழில் செய்கின்றவர்கள் தங்களை பாதுகாப்பதற்காக கட்சிகளின் அடையாளங்களின் கீழ் சரணடைந்து உள்ளார்களா? அந்த அடையாளங்களை வைத்து கொண்டு இந்த சட்டவிரோத தொழில்களை செய்கின்றார்களா? அப்படியென்றால் அவர்களை கட்டுப்படுத்துவது அந்த கட்சி நிர்வாகங்களினது பொறுப்பு தானே.

எனவே இங்கு பல விடயங்களை பார்க்க வேண்டி இருக்கிறது. இது வெறுமனே இழுவைப் படகு பற்றிய விடயமாக அல்லது சட்டவிரோத சுருக்கு வலை தொழில் சம்பந்தப்பட்டதாக அல்லது இந்திய இழுவைப் படகுகள் சம்பந்தப்பட்ட ஒன்றாக மட்டும் பார்க்க முடியாது.

வட பகுதியின் கடல் தொழில் உண்மையில் அபிவிருத்தி செய்யப்படுகின்றதா இல்லை குறைவிருத்தி செய்யப்படுகின்றதா என்ற ஒரு கேள்வி என்னிடம் ஆழமாக இருக்கின்றது. யுத்தத்திற்கு முன்பு இலங்கையின் மீன்பிடி தேவையில் மூன்றில் ஒரு பங்கை நாளாந்தம் வழங்கி கொண்டிருந்த ஒரு மாவட்டம் யாழ்ப்பாணம். இன்று தனக்கு தேவையான உணவை கூட பெற முடியாமல் அதன் பொருளாதாரம் சிதைக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தில் அதிகளவு பாதிக்கப்பட்ட ஒற்றை துறை என்றால் அது கடல் பொருளாதாரம் தான். அந்த கடல் தொழிலாளர் சமூகம் தங்களுடைய உற்பத்தி சாதனங்களை தரைகளுக்கு ஊடாக எடுத்து கொண்டு ஓட முடியாமல் அப்படியே விட்டு சென்றது.

அதன் காரணமாக அவர்களது பொருளாதாரம் முழுமையாக இழக்கப்பட்டது. மீள வந்தபோது அவை எதுவுமே புதுப்பிக்கப்படவில்லை. புதுப்பிப்பதற்கான சலுகைகளும் மிக சிறியளவிலேயே கிடைத்தன. சிறிய கண்ணாடி நார் இழை படகுகள் அல்லது சிறிய இயந்திரங்கள், வலைகள் கொடுப்பதன் மூலம் இந்த குறைபாட்டை வெற்றிகரமாக முடித்ததாக அவர்கள் நினைத்து கொள்கிறார்கள். இல்லை என்றால் அண்மைக் காலங்களில் கடல் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது என்று. இந்திய தூதுவர் வந்து நிவாரணம் வழங்குவார் அல்லது சீன தூதுவர் வந்து நிவாரணம் வழங்குவார். அந்தளவுக்கு நிவாரணத்தில் தங்கி வாழ்கின்ற ஒரு சமூகமாக, எட்டாயிரம் பத்தாயிரம் பெறுமதியான ஒரு உணவு பொதிக்காக கை ஏந்துகின்ற ஒரு சமூகமாக கணிப்பிடுகின்ற அளவுக்கு எங்களுடைய வட பகுதி கடல் தொழில் என்ன அந்தளவுக்கு மோசமாகி விட்டதா?

அந்தளவுக்கு இந்த கடல் தொழில் சமூகத்தை ஏளனப்படுத்த தொடங்கி விட்டோமா? எவ்வளவு பெரிய பொருளாதார பலத்துடன் சுதந்திரமாக இருந்த சமூகம் அது.

இப்பொழுது என்ன நடக்கின்றது? முன்பு கடல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் கடல் தொழில் சமூகத்தின் மத்தியில் மிக பலமானவை. கிராமங்களுக்குள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் செயற்படுவது போன்று கடற்கரையோர கிராமங்களில் கடல் தொழில் சங்கங்கள் மிக பலமாக செயற்பட்டு வந்தன. ஆனால் இவைகள் கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதியப்பட்டவை. மாகாண சபைகள் உருவாகிய தன் பின்பு கூட்டுறவு சட்டத்தின் கீழ் இந்த மீன்பிடி சங்கங்கள் பதியப்பட்டிருந்ததால் பகுதியளவில் இவை மாகாண சபையினுடைய கூட்டுறவு திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன. ஆனால் மீன்பிடி துறை மத்திய அரசாங்கத்தின் செயற்பாடாக இருந்தது. இதனால் மத்திய அரசாங்கம் சிலவேளைகளில் தன்னுடைய பணிகளை செய்வதில் பல சங்கடங்களை எதிர்நோக்கியது.

தாங்கள் நினைப்பது போன்று மீனவர்களை கையாள முடியாமல் இருக்கின்றது என்று ஒரு விடயம் மத்திய அரசாங்கத்துக்கு இருந்திருக்கும். அதனால் ஒரு 5 வருடங்களுக்கு முன்பாக கடல் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இருக்க கூடியதாக வேறு புதிய அமைப்புக்கள் மத்திய அரசாங்கத்தின் கடல் தொழில் அமைச்சினால் உருவாக்கப்பட்டன. அவை உருவாக்கப்பட்ட பின்பு அந்த சங்கங்கள் ஊடாக தான் கொழும்பு கடல் தொழில் அமைச்சை அணுக வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதுவரையும் காலாகாலமாக இருந்து வந்த கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களை பலம் இழக்க வைக்கின்ற ஒரு கபடத்தனமான முயற்சியாக இது முன்னெடுக்கப்பட்டது. இதனால் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களில் இரண்டு சங்கங்களுக்கு இடையில் ஒரு முரண்பாட்டை கொண்டு வருவதன் மூலம் கடல் தொழில் சமூகம் இரண்டு படுத்தப்பட்டது. தங்களுடைய மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கம் என்கின்ற அதிகார போட்டிக்காக கடல் தொழிலாளர்களுடைய ஒரு சமூக நிறுவனத்தை பங்கு போட செய்ததன் மூலம் அந்த சமூகங்களை பிய்த்தெடுக்கின்ற ஒரு கபடத்தனம் இங்கு செய்யப்பட்டது.

இப்பொழுதும் இந்த கடல் தொழில் சங்கங்களை பலவீனப்படுத்துகின்ற பல்வேறு முயற்சிகள் நடக்கின்றன. அவர்களுக்கு தவறான தகவல்களை கொடுத்து அல்லது அவர்களை தவறாக வழிநடத்தி அவர்களின் சம்மதங்கள் பெறப்படுகின்றன. அந்த சம்மதங்களை பெற்றுக்கொண்டு சட்ட விரோத தொழிலுக்கு அனுமதி கொடுத்த சம்பவங்களும் வடமராட்சி கிழக்கில் உண்டு. அதே போல குருநகர் பாசையூர், அரியாலை கடல் நீரேரிகளில் கடலட்டை பண்ணைகளை போடுவது தொடர்பாக அந்தந்த பகுதிகளின் மீனவ சங்கங்களிடம் சம்மதம் பெற்று எல்லாம் செய்கின்றோம் என்று சொல்கின்றார்கள். மீனவ சங்கங்களிடம் இப்போது உண்மையை கூறி கேட்ட போது அவர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக உணர்கின்றார்கள்.

கடல் தொழில் சமூகத்தை பங்கு போடுவது, சிறுமைப்படுத்துவது, அவர்களுடைய சிறிய சிறிய தனிப்பட்ட பலவீனங்களை காரணம் காட்டி அவர்களை செயல் இழக்க செய்வது இப்படியான பல விடயங்கள் நடக்கின்றன. எல்லா கூட்டுறவு சங்கங்களிலும் பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. நிர்வாக குறைபாடுகள் இருக்கின்றன. நிதி குறைபாடுகள், கணக்கீட்டு குறைபாடுகள், பொறுப்பு கூறல் குறைபாடுகள், இவ்வாறாக பல்வேறான குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை சீர் செய்து அந்த சங்கங்களை முன்னோக்கி எடுத்து செல்ல வேண்டியது அந்த சங்கங்களை முகாமை செய்பவர்களின் பொறுப்பு.

மாகாணத்தின் கூட்டுறவு சங்கமாக இருக்கலாம் அல்லது மாகாணத்தின் கடல் தொழில் திணைக்களமாக இருக்கலாம் அல்லது மத்திய அரசாங்கத்தின் கடல் தொழில் அமைச்சாக இருக்கலாம் இது அவர்களுடைய பொறுப்பு. மாறாக அவர்களே சமூகத்தை சின்னாபின்னமாக்குவது மிகவும் அபத்தமானது. அடுத்து அந்த மக்களினுடைய கடல் வளத்தை, கடல் ஆளுமையை அபிவிருத்தி செய்வதற்கு என்ன செய்கின்றோம் என்ன செய்திருக்கின்றோம் என்ற கேள்விகளும் முக்கியமானவை.

# நினைவேந்தல் ஊர்தியும் ஏற்படுத்தப்பட்ட தடைகளும்



தொகுப்பு - பரத்

திருகோணமலையில் வைத்து தியாகதீபம் நினைவேந்தல் ஊர்தி தாக்கப்பட்டமை தொடர்பில் நேரடி சாட்சியாக இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை பரப்பு செயலாளர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தெரிவித்த கருத்துகள் வருமாறு

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. நாங்கள் கடந்த வருடம் நினைவேந்தல் ஊர்தியை பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்திருந்தோம். பூபதி அம்மாவினுடைய நினைவேந்தல் கிழக்கு மாகாணத்திலே இடம்பெற்றதால் அவருடைய ஊர்தியை வடக்கு மாகாணத்தில் இருந்து கொண்டு சென்றிருந்தோம். கடந்த வருடம் இந்த ஊர்தியை இதே பொத்துவிலில் அருட்பிதா சக்திவேல் ஆசிகளோடு தொடக்கி வைத்தார். இந்தமுறையும் அவர் தான் அதே போல தொடக்கி வைத்தார்.

நாங்கள் பொத்துவிலிலே 15 ஆம் திகதி 9.45 மணியளவில் ஆரம்பித்து அக்கரைப்பற்று வந்து சேர்கின்ற பொழுது மாலை 3.30 மணி இருக்கும். அக்கரைப்பற்றில் இருப்பவர்கள் வீதியை மறித்து சிறிய சலசலப்பை ஏற்படு த்தி இருந்தார்கள். ஏதோ ஒருவகையில் அதனை தாண்டி இருந்தோம். இதிலே ஒரு விடயம் முக்கியமானது. கடந்த காலங்களிலே புலனாய்வு மிக ஆழமாக மக்களுக்குள்ளே ஊடுருவி இருந்தது. பலவீனமாக எங்கள் மக்கள்

அச்சத்துக்குள் உறைந்து போய் இருக்கின்ற பொழுது முன்னாள் போராளிகள், அவர்களுடைய குடும்பங்கள், அரசியலிலே ஈடுபடுகின்றவர்கள் மீது ஒடுக்குமுறை மிக மோசமாக இருந்தது. அதனால் அவர்கள் ஊர்தி பவனிக்கு ஆதரவு வழங்க முடியாத நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால், இந்த முறை இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளிலே சிறிலங்கா அரசின் பொலிஸ் ஒட்டுக்குழுக்கள் இந்த ஊர்தியின் பயண விபரங்களை வழங்கி பல இடங்களிலே ஊர்தியை தடுக்க காடையர்களை தயார்படுத்தியிருக்கிறார்கள். இந்த வகையிலே தான் அக்கரைப்பற்றில் சுலோக அட்டைகள், சிறிலங்கா அரசினுடைய கொடிகளை ஏந்தி வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். புலனாய்வுத்துறையில் இருப்பவர்கள் நன்கு தமிழ் பேச கூடியவர்கள். இந்த பயணத்தை ஆரம்பித்ததுமே எங்களுக்கு அச்சுறுத்தலை தரும் வகையில் முதலாவதாக இந்த முன்னெடுப்பை செய்திருந்தனர். நாங்கள் அதனை கடந்து வந்து அன்றைய இரவு மட்டக்களப்பின் எல்லையான மாங்காட்டிலே வாகனத்தை தரித்து, அடுத்த நாள் காலை அங்கிருந்து ஊர்தி பயணத்தை ஆரம்பித்து இருந்தோம். மட்டக்களப்பின் பல பகுதிகளிற்கும் சென்று பின்பு மட்டக்களப்பு கொழும்பு வீதி ஊடாக நகர்ந்தோம். அப்பொழுது முறக்கொட்டாஞ்சேனையிலே இராணுவ முகாமிற்கு நேரே முன்னே இருக்கின்ற இடத்தில் கொடிகளை உயர்த்தி நாங்கள் போகின்ற பக்கத்தை முற்றாக தடுத்து அவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்தார்கள். புலனாய்வுத் துறையினர் கொடுத்த நேரத்தினை வைத்து தான் குறித்த நேரத்திற்கு வந்து இவ்வாறு நடந்து கொண்டனர். பிள்ளையானின் ஒட்டுக் குழுக்கள், கருணாவின் ஒட்டுக்குழுக்கள் அதே போன்று மூளைச்சலவை செய்யப்பட்ட அப்பாவி முஸ்லீம் மக்களை தயார்படுத்தி இந்த தடையை ஏற்படுத்தினார்கள்.

நாங்கள் அதனையும் கடந்து வருகின்ற பொழுது வாழைச்சேனையிலே மீண்டும் இதே போன்று பாதையை மறித்திருந்தார்கள். இவ்வாறான சலசலப்புகளை தாண்டி கிண்ணையடிக்கு சென்று கிண்ணையடியால் திரும்பவும் பிரதான வீதியை அடைந்தோம். பின்னர் ஓட்டமாவடியை தாண்டி நாவலடி சந்தியை அடைந்தோம். அந்த சந்தியிலிருந்து ஒரு வீதி திருகோணமலைக்கு போகும் மற்றையது கொழும்பிற்கு போகும். அங்கும் அவர்கள் மறித்தார்கள். அந்த தடையையும் நாங்கள் ஒருவாறு கடந்து வரும் போது அந்த ஏற்பாட்டை செய்தவர்கள் சட்டென்று இன்னுமொரு வாகனத்தில் ஏறி எங்களுடைய வாகனத்தை கலைத்து கொண்டு வந்தார்கள். வாகரையை கடந்து நாங்கள் செல்கின்ற பொழுதும் எங்களை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். வாகரை ஒரு தமிழ்ப் பிரதேசம். அடுத்து வாகரையை கடந்து வெருகலிற்கு வரும் போது ஊர்தி சேருவலைக்கு போனால் அடித்து நொறுக்கப்படும் என்ற செய்தி எங்களுக்கு கிடைக்கின்றது. இரவு 12 மணியாகியும் நாங்கள் வெருகலை விட்டு நகர முடியாத சூழ்நிலை. ஏனென்றால் இரவில் போனால் சாட்சியமும் இல்லாமல் இந்த விடயங்கள் நடந்து முடியலாம்.

அங்கு இறங்கு துறைமுகம் என்று ஒரு பாதை இருக்கிறது. அதனூடாக போனால் மூதூர் ஊடாக கட்டைபறிச்சானிற்கு போய்ச் சேரலாம். வெருகலில் இருந்து விலகிப் போனால் நேராக சேனையூரிற்கு போகலாம். கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் குகன் மற்றும் இரண்டு செயற்பாட்டாளர்கள் எங்களை அங்கு அழைத்து சென்றார்கள். இதில் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால் நாங்கள் இந்த நிகழ்வை ஆரம்பித்த நாள் தொட்டு நாங்கள் வருகின்ற பிரதேசங்கள் எல்லா இடங்களிலும் மக்கள் மிகவும் உணர்வு பூர்வமாக ஒன்றிணைந்தார்கள். மக்களின் ஆதரவு திலீபன் அண்ணாவிற்கு என்றும் இருந்து கொண்டே இருக்கிறது.

நாங்கள் பாட்டாளிபுரத்திற்குள்ளால் சேனையூர் சென்று அங்கிருந்து 17.09.2023 அன்று நினைவேந்தல் ஊர்தி பவனியை ஆரம்பித்தோம். அங்கிருந்து மூதூர் சென்று சம்பூர் சென்று மீண்டும் வந்து கிண்ணியாவின் ஊடாக தம்பலகாமம் வந்து மதிய நேர உணவை கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் குகன் அவர்களினுடைய வீட்டிலே

> **திரும்பி போங்கள் இந்த பக்கத்தால் போக முடியாது என்று சத்தம் போட்டு கொண்டு நினைவேந்தல் ஊர்தியிலே பலமாக ஓங்கி பொல்லுகளாலும் கற்களாலும், தடிகளாலும், கம்புகளாலும் எறிந்து தாக்கினார்கள்**

உட்கொண்டு 2 மணிக்கு அந்த இடத்திலே இருந்து புறப்படுவதற்கு தயாரானோம். அப்பொழுது EP -DBK 0884 எனும் இலக்கம் உடைய மோட்டார் சைக்கிளில் இரண்டு புலனாய்வாளர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டு திரிவதை பார்த்து 'நீங்கள் யார்?' என்று அவர்களிடம் கேட்டேன். அவர்கள் தாங்கள் புலனாய்வு துறை என்று சொன்னார்கள். "12 நாள் பட்டினியாக இருந்து விடுதலையை நேசித்த ஒரு மகனை நாங்கள் காவி செல்கிறோம். இங்கே உங்களுக்கு என்ன வேலை?" என்று கேட்டேன். அதற்கு "உங்களது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருக்கிறார் அவருக்கான பாதுகாப்பை நாங்கள் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். நாங்கள் இங்கே புறப்படுகின்ற நேரத்தை தொலைபேசியிலே அறிவித்து விடுவது தான் அவர்களின் நோக்கம்.

நாங்கள் அங்கிருந்து பாலம்போட்டாறு என்ற கிராமத்தின் ஊடாக திருகோணமலை-கொழும்பு பிரதான வீதிக்கு ஏறினோம். அந்த பிரதான வீதியில் முழுக்க இராணுவ முகாம்களும் பொலிசாரின் தகவல் நிலையங்களும் இருக்கின்றன. பாலம்போட்டாறில் இருந்து விலாங்குளம் கடந்து கப்பல்துறைக்கு சென்று கொண்டிருந்த பொழுது கப்பல்துறை இராணுவ முகாமை அடுத்திருக்கின்ற இடத்தில் இருந்த ஒருவர் தன்னுடைய முகத்தை மறைத்துக் கொண்டு ஒரு பாறாங்கல்லை கையில் எடுத்து வீசி எறிந்தார். அதுதான் கப்பல்துறை பகுதியில் நடந்த முதல் தாக்குதல். அவர் எறிந்த கல் வாகனத்தின் முன்பக்கத்தில் நானும் சாரதியும் இருக்கின்ற பகுதியில் பட்டு அந்த பகுதி வெடித்து தகரமும் நெளிந்து இருந்தது. நான் சாரதியிடம் சொன்னேன், "கல் எறிந்திருக்கிறார்கள், நாங்கள் கொஞ்சம் அவதானமாக போக வேண்டும்" என்று. அப்பகுதியை வேகமாக கடந்திடுவோம் என்று நினைத்து வேகமாக சென்றோம். அதற்கடுத்தது சர்தாபுர கிராமம். அந்த சந்தியிலே நாங்கள் திரும்பி விட்டால் தமிழ் கிராமங்களின் ஊடாக ஹொரவப்பொத்தான வீதியால் அனுராதபுரத்திற்கு போகலாம், இல்லையென்றால் நேராக போவோமாக இருந்தால் 4ம் கட்டை அங்கும் தடுப்புகள் இருப்பதாக அறிய கிடைத்தது.

சர்தாபுரத்திலே பெரிய பெரிய மரக்குற்றிகளை போட்டு 100 பேர் அளவில் நின்றார்கள். அவர்கள் சிங்கள மொழியிலே "திரும்பி போங்கள் இந்த பக்கத்தால் போக முடியாது" என்று சத்தம் போட்டு கொண்டு வாகனத்தை சூழ்ந்து கொண்டார்கள். நினைவேந்தல் ஊர்தியிலே பலமாக ஓங்கி பொல்லுகளாலும் கற்களாலும், தடிகளாலும், கம்புகளாலும் எறிந்து தாக்கினார்கள். இந்த இடத்திலே எங்களுடைய கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் வாகனத்திலே பின்னுக்கு திலீபன் அண்ணாவின் நினைவு ஊர்தியிலே வெளிப்பக்கமாகவே இருந்து வந்தார். நான் அந்த வாகனத்தின் சாரதியோடு முன்னுக்கு இருந்தேன். இந்த நேரத்தில் பின்னுக்கு இருந்தவர்கள் இறங்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டார்கள்.

மிக அழகாக அந்த வாகனம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சங்கிலி பிணைக்கப்பட்ட நினைவிடமாக இருந்த இடங்கள் எல்லாவற்றையும் அவர்கள் அடித்து நொறுக்கினார்கள். அதிலே 4 மின்விளக்குகள் பூட்டி இருந்தோம். அந்த கட்டமைப்பையே சீர்குலைத்தார்கள் பின்பு வாகனத்தினுடைய சாரதி பக்கம் இருந்த கண்ணாடியையும் அடித்து நொறுக்கி சாரதி மீதும் கற்களை வீசினார்கள். அப்பொழுது பொலிசார் எனக்கு பக்கத்தில் வாகனத்தை



சூழ்ந்து கொண்டு வரும் போது நான் அவர்களிடம் சொன்னேன், "மக்கள் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு உரிய பாதுகாப்பில்லை. இது நாங்கள் அமைதியாக கொண்டு வருகின்ற ஊர்வலம். இதனை நீங்கள் இவ்வாறு தாக்குதல் செய்ய இயலாது" என்று. வீதியை மறித்து இருக்கிறார்கள். பொலிசார் அங்கு இருக்கிறார்கள் புலனாய்வாளர்கள் எல்லோருமே அங்கு இருக்கிறார்கள். இவர்களுக்கு முன்னால் சிங்கள காடையர்கள். 83 ஆம் ஆண்டு இப்படி நடந்ததாக சொல்லி தான் கேள்விப்பட்டிருக்கிறோம். அதே போல இங்கும் கொரியாவத்தை என்று சொல்லப்படுகின்ற இடத்திலிருந்து மீன்பிடி சமூகத்தவர்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட பாதுகாப்பை எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றிருக்கவில்லை. ஏனென்றால், சிங்கள பௌத்த பேரினவாத அரசினுடைய இந்த கட்டமைப்புகள் எதுவுமே தமிழ் மக்களுக்கானது அல்ல. இந்த தாக்குதல் மிக அகோரமாக இருந்தது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மீது தலைக்கவசங்களாலும் தடிகளாலும் மிக மோசமான வகையில் தாக்கினார்கள். ஊர்திக்கு சேதங்களை விளைவித்தார்கள்.

இதன் பின்பு நாங்கள் தம்பலகாமத்திற்கே திரும்பி கட்சியின் அமைப்பாளரின் வீட்டிற்கு வந்திருந்தோம். மாலை 6.30 மணியளவிலே மூதூர் பிரதேசத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகரும், திருகோணமலை பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகரும் வருகை தந்தார்கள். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை சந்தித்து "நீங்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். நீங்கள் இந்த விடயங்களை அறிவித்து விட்டு வர வேண்டும். சிங்கள முஸ்லீம் மக்கள் மிகப் பாரிய அளவிலே இதற்கு எதிர்ப்பை தெரிவிக்கிறார்கள். உங்களுக்கு பாதுகாப்பு கொடுத்து வாகனங்களை கொண்டு செல்வது பற்றி தான் நாங்கள் பேச வந்திருக்கிறோம். உங்களுடைய முடிவு என்ன?" என்று கேட்டார்கள்.

அதற்கு "எங்களை பொறுத்தவரையிலே நாங்கள் இந்த அச்சுறுத்தல்களை தொடர்ந்து சந்தித்து வருகிறோம். கடந்த காலங்களிலே சிறிலங்கா அரசின் மீதுள்ள எமது சந்தேகம் அவநம்பிக்கை என்பவை மீண்டும் மீண்டும் நிருபிக்கப்பட்டு இருக்கின்றன. உங்களுடைய புலனாய்வுக் கட்டமைப்பு தான் எங்களை பின் தொடர்ந்து வருகிறது. உங்களுக்கு சகல தகவல்களும் இந்த புலனாய்வு துறையினர் மூலம் வழங்கப்படுகிறது. அங்கே பொலிசார் இருவர் இருக்கிறார்கள் அதேபோல எம்மை தொடர்ந்து வந்த புலனாய்வாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அப்படி இருக்கையில் நீங்கள் பாதுகாப்பு தந்து பவனியை நகர்த்த வேண்டிய தேவையில்லை. மக்களுடைய பாதுகாப்பு தான் எங்களுடைய பாதுகாப்பு. உங்களுக்கு சிங்கள முஸ்லீம் மக்கள் இதனை தடுக்கிறார்கள் என்ற தகவல் வந்திருந்தால் அவர்களின் சட்ட விரோத செயற்பாட்டை தடுத்து நிறுத்துவது தான் உங்களுடைய வேலை. கலவரம் வரும் என்று மிரட்டாமல் கலவரம் வராமல் பாருங்கள்" என்று கஜேந்திரன் அவர்கள் பதிலளித்தார்.

சிங்கள முஸலீம் மக்கள் என்ற போர்வையில் சிங்கள பேரினவாத அரசினுடைய இராணுவ பொலிஸ் காவல் புலனாய்வு கட்டமைப்புகள் தான் இதனை செய்திருக்கின்றன. இந்த விடயங்களை பல இடங்களுக்கும் கொண்டு சேர்த்திருக்கிறோம்.

(03ஆம் பக்க தொடர்ச்சி)

பத்து இடங்களில் சேற்றுக்குள் ஊன்றி விட வேண்டும். அதில் சின்ன சின்ன பறவைகள், மைனாக்கள், கருங்குருவிகள் போன்றன வந்து உட்கார்ந்து பூச்சி பிடிக்கின்றன. இரவில் ஆந்தைகள் வந்து உட்கார்ந்து எலிகளை கட்டுப்படுத்துகின்றன. அதேபோல நாங்கள் விளக்கு பொறியை பயன்படுத்துகிறோம். மாலை 6 மணிக்கு ஒரு விளக்கை எரிய விட்டு கீழே சில சொட்டுகள் வேப்பெண்ணை கலந்து தண்ணீரும் வைத்து விடுகிறோம். விளக்கினால் பூச்சிகள் பெருமளவில் கவரப்பட்டு அந்த நீரில் விழுந்து இறந்து போகின்றன. இதனால் அவற்றின் பரவுதல் வெகுவாக கட்டுப்படுகிறது. நெல் வயலில் மஞ்சள் பலகைகளையும் வைக்கிறோம். இதன்மூலமும் பூச்சிகளின் பெருக்கத்தை வெகுவாக கட்டுப்படுத்தலாம்.

களையை எடுப்பதற்கு கோனோவீடர் (Cono Weeder) எனும் கருவியை பயன்படுத்துகிறோம். 2 நெல் வரிசைகளுக்கு இடையில் இந்த கருவியை விடும் போது களைகள் வெட்டப்பட்டு மண்ணிற்குள் புதைக்கப்படுகின்றன. இதனால் வரிசைகளுக்கு இடையில் இருக்கின்ற மண் திரும்பவும் உழப்படுகிறது. மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து வெள்ளை வேர்கள் பெருக்கம் அடைந்து உயிரோட்டமான வெள்ளை வேர்கள் அதிக தூர்கள் உருவாகுவதற்கு காரணமாக இருக்கின்றன. எங்களுடைய இந்த செயற்பாட்டில் 45 நாட்களுக்குள் இரண்டு முறை களை கருவியை உருட்டுகிறோம். இந்த கருவி எளிமையாக வடிவமைக்கப்பட்டிருப்பதால் இரசாயனங்களோ எண்ணெய் செலவுகளோ தேவையில்லை. ஒரே ஒரு பெண்மணியோ அல்லது சில பெண்களோ சேர்ந்தார்கள் என்றால் ஒரு ஏக்கரில் உள்ள களையை ஒரு நாளைக்குள் அகற்ற முடியும். அப்படி இரண்டே தடவை இந்த களை கருவியை நெல்வரிசை இடைவெளிக்குள் உருட்டுவதன் மூலமாக அதிக தூர்களை நாங்கள் உருவாக்க முடியும். இவ்வாறு ஒருங்கிணைந்த முறையை இங்கு நிறைய பேருக்கு பயிற்றுவித்திருக்கிறோம்.

மேலும், முதல் கட்டத்திலேயே நிலம் திறந்து இருக்காமல் நிலப்போர்வையை உருவாக்க நெல் வயலில் அசோலாவை தூவி விடுகிறோம். இவ்வாறு நிலப்போர்வை இருப்பதால் களைகள் வளராமல் அசோலா கட்டுப்படுத்துகிறது. அதே நேரத்தில் நைதரசனை நிலத்தில் சேர்க்க கூடியதாக இருக்கிறது. களை எடுக்கும் கருவியை பிரயோகிக்கும் போது அசோலா நிலத்தில் புதைக்கப்படுவதால் பல மூட்டைகள் பசளை போட்டதற்கு சமனாகிறது.

இரசாயன உரங்கள் தூவும் போது காற்றினால் பெருமளவு வெளியேறி விடுகிறது. அதே போல யூரியா போன்ற பசளைகள் நீரில் விரைவாக கரைய கூடியவை என்பதால் கரைந்து நிலத்தின் ஆழத்திற்கு சென்று விடுகின்றன. நாங்கள் பாவிக்கின்ற பெரும்பாலான இரசாயனங்கள் பயிர் சாப்பிட கூடிய இடத்தில் அதனுடைய வேர் இருக்கின்ற இடத்தில் இருப்பதில்லை என்பது தான் எங்களுடைய ஆராய்ச்சியின் முடிவு. நாங்கள் போடக்கூடிய இரசாயன பசளைகளில் 3% தான் பயிர்களுக்கு கிடைக்கிறது.

உயிர்வேலியில் கிளிசறியா, வாதனாரி போன்ற பலவகையான இலை தழைகளை கொடுக்க கூடிய, வெட்ட வெட்ட தொடர்ந்து வளர கூடிய மரங்களை வைத்திருக்கிறோம். நீர் பாய்கின்ற வாய்மடையில் ஒரு குழியை வெட்டி ஒரு சாக்கில் அந்த இலைகளையும் சாணத்தையும் கலந்து வைத்து விடுகிறோம். தண்ணீர் உள்ளே பாயும் பொழுது இந்த இலைகள் எல்லாம் அழுகி, தாவர, விலங்கு கழிவுகள் எல்லாம் கலந்த ஒரு அருமையான அடர் பச்சை நிறமாக பாயும். அந்த தண்ணீரில் நெல் நிறைய தூர் அடித்து செழித்து வளர்ந்து அதிக விளைச்சலை தரக் கூடியதாக இருக்கிறது. இப்படியாக நெல் செய்கையில் வெளியில் இருந்து எந்த பொருளையும் கொண்டு வராத அளவிற்கு ஒரு முறைமையை வடிவமைப்பதற்கு சொல்லி கொடுக்கிறோம்.

ஒருவேளை மழையே வரவில்லை என்றாலும் அசோலா போன்ற அந்த நிலப்போர்வை இருப்பதனால் வரட்சியை தாங்கி வளரும். இதே சமயத்தில் நெல் செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னரே பலவகையான ஊக்க மருந்துகளை தரக்கூடிய தாவரங்களை விருத்தி செய்வதற்கு சொல்லி தருகிறோம். மிகவும் செலவு குறைந்த இலகுவில் கிடைக்க கூடிய இலை



தழைகளில் இருந்து தான் இவற்றை சொல்லி தருகிறோம். இவை எல்லாவற்றையும் நீங்கள் தயாரித்து இருந்தீர்கள் என்றால் வரப்போகின்ற பெரும்போகத்தில் பெருமளவு விளைச்சலை சுலபமாக பெற முடியும்.

ஒரு சிறிய நிலத்தில் நீங்கள் இதனை ஆரம்பித்தால் உங்கள் கண் முன்னாலேயே உங்களுக்கு ஆதாரம் கிடைக்கும். புதிய முறைக்குள் இலகுவில் நுழைந்து விடுவீர்கள். ஒரு சில தடவைகள் செய்த பின்னர் தற்சார்பான வேளாண்மைக்குள் போய்விடலாம். இந்த நடைமுறைகளை சொல்லி கொடுக்கும் போது விவசாய வேளாண்மை செய்பவர்கள் மிகுந்த ஆச்சரியம் அடைகிறார்கள். இப்படி ஒரு முறைமை இருக்கிறதா என்று உற்சாகமாக ஆர்வமாக இருக்கிறார்கள். இது எங்களுக்கும் மகிழ்ச்சியை கொடுத்து இருக்கிறது.

இரசாயனங்கள் இல்லாமல் விவசாயம் செய்து உலகில் உள்ள அனைவருக்கும் உணவளிக்க முடியுமா? அது சாத்தியமில்லை என்று சிலரது கருத்து இருக்கிறது. நிலங்கள் மலடாகி கொண்டே வருகின்றன. உலகளவில் 30% நிலங்கள் உப்பாகி விட்டன. அதனால் இரசாயனங்களை பயன்படுத்தினால் தான் விளைச்சல் என்று சொல்வது சரியான ஒரு வார்த்தை இல்லை. அதனுடைய பொருள் சரியில்லை என்பதை உலகம் நிறைய புரிய ஆரம்பித்திருக்கிறது.

நிலங்களுக்கு தாவர கழிவுகளும் விலங்கு கழிவுகளும் தான் அதிகமாக தேவைப்படுகின்றன. இந்த கழிவுகளினுடைய சுழற்சிதான் எங்களுடைய வேளாண்மைக்கு அத்திவாரம். மண்ணில் இலட்சக்கணக்கான நுண்ணுயிர்கள் இருக்கின்றன. அவை தான் பல செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. நுண்ணுயிர்கள் இல்லாத உயிரோட்டம் இல்லாத மண்ணில் நாங்கள் எவ்வளவு போராடினாலும் அங்கு எல்லா செயற்பாட்டையும் கொண்டு செல்ல முடிவதில்லை.

இரசாயன வேளாண்மையை தவிர்க்க வேண்டிய கால கட்டத்தை நோக்கி நாங்கள் எவ்வளவோ தூரம் வந்து விட்டோம். சவால்கள் நிறைந்த உலகத்தில் அதிகம் செலவு செய்துவிட்டு அதிகம் விளைச்சல் வரவில்லை எனும் போது செலவழித்த பணத்தை விவசாயிகள் எடுக்க முடியாமல் உலகம் முழுவதும் வேளாண்மை செய்பவர்கள் கடனாளிகளாகின்றனர், தற்கொலை செய்திருக்கிறார்கள். இது உலகம் முழுவதும் நடக்கின்ற போக்கு. எனவே இது மாற்றப்பட வேண்டி இருக்கிறது. இழந்த பூமியை ஒரு சில மாதங்களில் அற்புதமாக உருவாக்க முடியும். இது விழிப்புணர்வுடன் பல தொடர் நிகழ்ச்சியாக செய்ய வேண்டிய வேலை. இதற்கு உங்களை தயார்ப்படுத்திக் கொண்டால் ஒரு நிரந்தர வேளாண்மைக்குள் போய்விடலாம்.



இரசாயன வேளாண்மையில் ஒவ்வொரு தடவையும் வெளியில் இருந்து பொருட்களை கொண்டுவர வேண்டும். உங்களுடைய சுமை குறைய போவதில்லை. பூச்சிகளும் தமது எதிர்ப்பு சக்தியை வளர்த்து கொண்டு விட்டன. எங்களுடைய ஆராய்ச்சியில் கடையில் வாங்க கூடிய எந்தவொரு இரசாயனத்தாலும் பூச்சிகளை முழுமையாக கட்டுப்படுத்த முடிவதில்லை என்று தெரிய வந்துள்ளது. இதனால் பூச்சிகளை கட்டுப்படுத்துவது போராட்டமாக இருக்கிறது. இந்த போராட்டமே எமக்கு தேவையில்லை.

களையை கட்டுப்படுத்துவதற்கு நிலத்தை மூடி வைத்தால் நிலத்திற்கு கீழே இருக்க கூடியவற்றிற்கு வெயில் கிடைக்காமல் களை இயல்பாகவே கட்டுப்படுத்தப்படுகிறது. விருப்பமான களையை நாங்கள் உருவாக்கி விட்டால் அது எங்களது தேர்வாக மாறி விடுகிறது. நிலத்தில் உளுந்தோ, பயறோ, கொள்ளோ ஏதாவது ஒரு பசுமையான செடியை வளர்க்கும் போது அது நிலத்தில் திரும்பவும் சத்துக்களை வழங்கி நிலத்தை வளப்படுத்துகிறது.

இரசாயன பயன்பாட்டினால் ஒரு துளி கூட பயன் அடைய முடியாது. களை கொல்லி அடிக்கப்பட்ட அமெரிக்க வயல்களில் இராட்சச களைகள் உருவாகிவிட்டன. அந்த களையை அழிக்கவே முடியவில்லை. அங்கும் நிறைய விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். நாங்கள் பார்க்கும் போது மலைத்துப் போனோம். 5, 6 அடி அளவில் இறப்பர் மாதிரியான இலைகளுடன் மிகப்பெரிய களைகள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வலுவாகி விட்டன.

உங்களுடைய நிலத்தை ஒரு சூழலுக்கு ஏற்ற நிலமாக, சமநிலையானதாக, பல பயிர் சாகுபடி செய்கின்ற நிலமாக, நிலப்போர்வை வடிகாலமைப்பு உள்ளதாக வளப்படுத்தி கொண்டீர்கள் என்றால் சுலபமாக இலாபம் தரக்கூடிய வேளாண்மைக்குள் போக முடியும். இதனை இலட்ச கணக்கான ஏக்கர்களில் பல நாடுகளில் செய்து வெற்றி கண்டதனால் தான் எங்களது பயணம் இன்னமும் உயிர்ப்போடு இருக்கிறது. அத்தோடு நம்பிக்கை தரும் செய்தி என்னவென்றால் உலகில் உள்ள அனைவருக்கும் நிச்சயம் சோறு கொடுக்க முடியும்.

இன்றைக்கு இரசாயன வேளாண்மை நடந்த இடங்களில் மக்கள் வளமாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இரசாயன வேளாண்மையை மேற்கொண்ட இந்தியாவில் கூட 40 கோடி மக்கள் ஒருவேளை உணவு உண்பவர்களாக இருப்பதாக தான் புள்ளி விபரங்கள் சொல்கின்றன. ஆகவே இந்த வேளாண்மை பெரியளவில் கொடுத்திருக்கிறதா என்றால் உண்மையாக இல்லை என்பதே பதில். இந்தியாவில் அரிசியும் கோதுமையும் முதன்மைப்படுத்தப்பட்டன. அதனால் பல பயிர்களின் சத்தையும் அவை எடுத்து கொண்டன. பெரிய நிலப்பரப்பில் இந்த இரண்டு பயிரும் விளைந்ததனால் இந்தியாவில் அரிசியும் கோதுமையும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது என்பது தான் உண்மை. ஆனால் 42% மக்களும் குழந்தைகளும் அவதிப்படுகிறார்கள்.

ஆகவே ஊட்டசத்து பற்றாக்குறையை ஒழிப்பது என்பதுவும் நாங்கள் எட்ட வேண்டிய இலக்கு. அதில் பல பயிர் சாகுபடி, பல்லுயிர் பெருக்கம் என்பது அத்தியாவசியம். உணவு சமநிலையாக இருந்தால் மட்டும் தான் நோய் இல்லாத ஒரு சமூகத்தையும் வளமான எதிர்காலத்தையும் உருவாக்க முடியும். வெறும் சோறு மட்டும் போதாது.

இயற்கை முறையில் நாங்கள் சொல்கின்ற உயிர்த்தெழும் பூமி வேளாண்மையில் நிச்சயமாக எல்லோருக்கும் உணவு கிடைக்கும். காய்கறி கிடைக்கும். பழங்கள் கிடைக்கும். கீரை கிடைக்கும். ஒரு சமநிலையான உணவு கட்டாயமாக கிடைக்கும். இந்த இலக்கு தான் நாங்கள் அடைய வேண்டிய முக்கியமான இலக்கு. தொடர்ந்து பயணத்தில் சாதித்து கொண்டே தான் இருக்கிறோம். எங்களுடன் மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் இணைந்து இருக்கிறார்கள்.

# பொறுப்புக் கூறல் விடயத்தில் எந்தவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காத அரசு




சி. அ யோதிலிங்கம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரினுடைய அறிக்கை வெளிவந்து இருக்கிறது. அதேவேளை நேரடி உரையை கூட ஐ.நா மனித உரிமை பிரதி ஆணையாளர் வழங்கியுள்ளார். இந்த உரையிலோ அல்லது அறிக்கையிலோ புதிதாக எதுவும் இருப்பதாக சொல்லிவிட முடியாது. பழைய விடயங்கள் தான் அங்கு கூறப்பட்டு இருக்கின்றன. பழைய விடயங்களில் கூட அழுத்தங்கள் பெரிதாக வந்தன என்று சொல்லிவிட முடியாது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரினுடைய முன்னைய அறிக்கையில், இதனை குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவது பற்றி யோசிக்க வேண்டும், அரசுகள் தங்களினுடைய நாடுகளின் போர் குற்றம் தொடர்பாக விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கருத்தை கூறி இருந்தார். ஆனால் இந்த அறிக்கையிலே அது பற்றி பெரிதாக வரவில்லை. வெறும் குறிப்பிட்டளவில் மட்டும் இருக்கிறது. அதைப்பற்றி பெரிதாக அழுத்தங்கள் வரவில்லை. ஆனாலும் இந்த பொறுப்பு கூறல் விடயத்தில் அரசாங்கம் போதியளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டு இருக்கின்றார்.

அதேவேளை தமிழ் மக்கள் மீதான போர்க் குற்ற விவகாரங்களோடு இலங்கையினுடைய ஏனைய மனித உரிமை விவகாரங்களையும் நிறைய கூறி இருக்கின்றார். போர்க்குற்ற விவகாரம் என்பது ஒரு சிறிய பகுதியாக வந்திருக்கிறது. ஆகவே இது தமிழ் மக்கள் மீதான போர்க்குற்றங்களை சிறுப்பித்து காட்டுகின்ற முயற்சியா என்கிற கேள்வியும் எழுகிறது. முன்பு போர்க்குற்றம் என்கின்ற விடயம் தான் முழுமையாக இருந்தது. இப்போது ஒரு 25% தான் வரும். 75% ஏனைய மனித உரிமை மீறல் விவகாரங்களை பேசுகின்ற ஒரு நிலை தான் இருக்கின்றது. மொத்தமாக இதனை இலங்கையின் போர்க்குற்ற பிரச்சனையாக பார்க்காமல் இலங்கையின் மனித உரிமை விவகாரங்களாக பார்க்கின்ற ஒரு விம்பமும் தெரிகின்றது. இது தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஆரோக்கியமானதாக இல்லை.

தற்பொழுது உயிர்த்த ஞாயிறு விவகாரத்தை சனல் 4 வெளியில் கொண்டு வந்திருக்கிறது. இந்த இரண்டும் ஒரே நேரத்தில் வந்தமையால் ஐ.நா மனித ஆணையாளரினுடைய அறிக்கையை விட சனல் 4 இனது தான் இன்றைக்கு முழுமையான ஒரு பேசுபொருளாக இருக்கின்ற நிலைமை ஒன்றை நாங்கள் பார்க்கலாம். இது தமிழ் மக்களின் விவகாரத்தை கொஞ்சம் குறை மதிப்பிற்கு உள்ளாக்கி இருக்கிறதா என்கின்ற ஒரு கரிசனையை எழுப்பி இருக்கிறது என்று நாங்கள் கூறலாம். இந்த இரண்டையும் நாங்கள் இணைத்து பார்க்கின்ற பொழுது தமிழ் மக்களை பொறுத்தவரையில் பல சாதகமான வெளிகளும் பாதகமான வெளிகளும் இருக்கின்றன.

பாதகமானதை பார்க்கின்ற பொழுது தமிழ் மக்கள் மீதான போர்க்குற்ற விவகாரத்தின் மீதான பார்வையை சிறுப்பித்து விட்டது என்பதை சொல்லலாம். ஐ.நா மனித உரிமைகள் பேரவை உக்ரைன் விவகாரத்தில் அணுகியது போல எங்களுடைய விவகாரத்தில் அணுகவில்லை. உக்ரைனின் விவகாரம் உடனடியாகவே குற்றவியல் நீதிமன்றத்திற்கு சென்றது. எங்களினுடைய விவகாரம் அவ்வளவுக்கு செல்வதற்கான அழுத்தங்கள் எதுவும் கொடுக்கவில்லை. ஆகவே எங்களின் விவகாரத்தை சர்வதேச அளவிற்கு கொண்டு செல்வதற்கு சர்வதேச சக்திகள் தயாராக இல்லை என்ற உண்மையும் இதற்குள்ளால் வெளிவருகின்றது. இதுவும் எங்களை பொறுத்தவரையில் பாதகமானது. இதில் இந்தியாவினுடைய அழுத்தங்கள் தான் கூடுதலாக இருக்கும். இந்தியா ஒரு போதும் போர்க்குற்றம் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடப்பதை விரும்ப போவதில்லை.

> “இன்றைக்கு தென்னிலங்கை சர்வதேச விசாரணை வேண்டுமென்று குரல் எழுப்ப தொடங்கி விட்டது. பல சக்திகள் அந்த குரலை எழுப்ப தொடங்கி இருக்கிறார்கள்”

ஆகவே இந்தியாவினுடைய இந்த நிலைப்பாடும் கூட எங்களுக்கு பாதகமான அம்சம் தான். சேரன் தனது கவிதையில் சொன்னது போல “இந்தியாவின் நுனியில் இலங்கையை ஏன் வைத்தாய்” என்று கேட்க வேண்டிய நேரமும் வந்திருக்கிறது என்றே நான் நினைக்கிறேன்.

இப்படி பாதகமான விடயங்கள் இருந்தாலும் கூட இதற்குள் எங்களுக்கு சாதகமான விடயங்களும் இருக்கின்றன. அதில் முதலாவது விடயம், இலங்கை விவகாரத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவை கிடப்பில் போடாதது. அது கோவையை மூடாது எப்போதும் திறந்து தான் வைத்திருக்கும். தனக்கு தேவையென்றால் தூக்கும், தனக்கு தேவையென்றால் திறக்கும். தொடர்ச்சியாக எங்களுடைய விடயம் வைக்கப்பட்டிருக்கும் என்பது எங்களுக்கு சாதகமான விடயம்.

இந்த சனல் 4 விவகாரமும் கூட எங்களுக்கு சாதகமான வழிகளை திறக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு தென்னிலங்கை சர்வதேச விசாரணை வேண்டுமென்று குரல் எழுப்ப தொடங்கி விட்டது. பல சக்திகள் அந்த குரலை எழுப்ப தொடங்கி இருக்கிறார்கள். அதற்கு எதிரான குரல் மிக

வும் சொற்பமாக தான் இருக்கின்றது. இது சர்வதேச விசாரணை என்கின்ற விடயத்திற்கு வருமென்றால் நாங்கள் எங்களுடைய போர்க் குற்ற விவகாரத்திற்கு சர்வதேச விசாரணை தேவை என்கின்ற ஒரு அழுத்தத்தை கொடுக்க கூடியதான ஒரு சூழ்நிலையை எங்களுக்கு உருவாக்கி இருக்கிறது. இது உண்மையில் எங்களுக்கு சாதகமான அம்சம் என்று தான் குறிப்பிடலாம்.

இதைவிட இன்றைக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியும் எங்களுக்கு சாதகமான விடயம். எங்களது பிரச்சனையை தீர்க்காமல் இவர்களால் ஒரு படி கூட நகர முடியாத சூழல் ஒன்று இருக்கிறது. பெருந்தேசியவாதம் கூட ஒரு சாதகமான விடயம் தான். பெருந்தேசியவாதம் 13வது திருத்தத்தை கூட நடைமுறைப்படுத்த விடுவதில்லை. இதுவும் சாதகமான விடயம்.

இப்படி சாதகமான விடயங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி பாதகமான விடயங்களை கடந்து எவ்வாறு முன்னேறுவது என்பது பற்றி நாங்கள் கூடுதலாக யோசிப்பது தான் ஆரோக்கியமானதாக இருக்கும். அவ்வாறு யோசித்து நாங்கள் இன்றைக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைக்கும் போது தனித்து வைக்க முடியாது. அதற்கு ஒரு ஒருங்கிணைந்த குரல் வேண்டும். ஆகவே ஒரு ஒருங்கிணைந்த குரலை உருவாக்கி நாங்கள் அதற்குள்ளால் அழுத்தங்களை கொடுக்கின்ற போது தமிழ் தரப்பினது விவகாரம் முன்னேறி செல்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகும்.

சனல் 4 விவகாரம் இன்னொரு பக்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஒரு வகையான பாதுகாப்பை கொடுக்கிறது. மொட்டு கட்சியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இது உதவ கூடியதாக இருக்கிறது. ஏனென்றால் தற்பொழுது ராஜபக்சாக்கள் ரணிலோடு பேரம் பேசுகின்ற நிலையை எடுக்க முயற்சிக்கிறார்கள். ரணில் அதற்காக இரண்டு விடயங்களை செய்கிறார், ஒன்று இந்த சனல் 4 விவகாரங்களை மறை முகமாக பயன்படுத்துகிறார். மற்றது நிமல் லான்சா போன்ற குழுக்களை உருவாக்கி அவர்களை தனியாக செயற்பட விடுகிறார். இதில் ரணில் அடுத்த ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதில் நிமல் லான்சா குழுவிற்கும் விருப்பம், ராஜபக்ச குழுவிற்கும் விருப்பம். ஆனால் ராஜபக்சாக்கள் தங்களினுடைய முயற்சியினால் தான் ரணில் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று பார்க்கிறார்கள். ஏனென்றால் இதன் ஊடாக தான் தாங்கள் பேரம் பேசலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் ரணில் அதை விரும்பவில்லை.

எந்தவித அழுத்தங்களும் இல்லாமல் பேரம் பேசுகின்ற நிலை இல்லாமல் தான் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பது தான் ரணிலின் நிலைப்பாடு. மேற்குலகத்தை பொறுத்தவரையில் ரணில் ஒரு மிகப்பெரிய சொத்து. ரணிலை பலவீனப்படுத்துவதற்கு அவர்கள் ஒரு போதும் விரும்ப மாட்டார்கள். ஆகவே ரணிலை பாதுகாப்பதற்கான எல்லா வகையான செயற்பாடுகளையும் செய்வதற்கான வாய்ப்புக்கள் கூடுதலாக இருக்கின்றன. ஏனென்றால் ரணிலை பாதுகாப்பதன் மூலமாக தான் அவர்களுடைய இந்தோ-பசுபிக் திட்டத்தை இலங்கையில் நகர்த்த கூடியதாக இருக்கும். ரணில் இல்லையென்றால் அவர்களால் ஒரு படி கூட நகர்த்த இயலாது.

இன்றைக்கு இந்த சனல் 4 விவகாரம் மொட்டு கட்சியை கட்டுப்படுத்துகிறது. அதனூடாக சீனாவை கட்டுப்படுத்துகிறது. இது இரண்டையும் கட்டுப்படுத்துவதன் ஊடாக பெருந்தேசியவாதத்தையும் ஓரளவுக்கு கட்டுப்படுத்துகிறது. பெருந்தேசியவாதம் தனிமைப்பட்ட குறுகிய சில ஆட்களினால் மட்டும் கட்டுப்படுத்தப்படும் சூழ்நிலை ஒன்று உருவாகி இருக்கிறது. பெருந்தேசியவாதம் பலமாக இருந்தால் இந்தோ - பசுபிக் மூலோபாயத்தை நகர்த்த முடியாத சிக்கல் இருக்கிறது. ஏனென்றால் பெருந்தேசியவாதம் கட்டியெழுப்பப்பட்டது 3 தூண்களில் தான். மேற்குலக எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு. ஆகவே மேற்குலக எதிர்ப்பு என்பது பெருந்தேசியவாதத்தின் அடிப்படை. ஆகவே பெருந்தேசியவாதம் இந்தோ - பசுபிக் மூலோபாயத்தை நகர்த்த விடாது. இதனை ஏதோ ஒருவகையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்து

கொண்டு தான் தங்களுடைய திட்டங்களை நகர்த்த முடியும்.

மற்றது சனல் 4 காணொளிக்கு ஊடாக இன்னொரு செய்தியும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. என்னவென்றால், ராஜபக்சாக்கள் பெருந்தேசியவாதத்திற்குள் அடைக்கலம் தேட கூடாது. அதை நிறுத்த வேண்டும் என்கிற விடயத்திலும் இது கவனமாக இருக்கிறது. உண்மையில் சனல் 4 காணொளிகள் ராஜபக் சாக்களுக்கு போடப்பட்டுள்ள பொறி என்று தான் நாங்கள் சொல்ல வேண்டும். ஆகவே இந்த விடயங்கள் எல்லாவற்றையும் விளங்கி கொண்டு தமிழ் தரப்பு எப்படி நகர்வது என்பதில் கவனமாக இருப்பது தான் கூடுதலாக பொருத்தமாக இருக்கும்.

போர்க்குற்ற விவகாரம் தமிழ் மக்கள் சம்பந்தமான விடயம். தமிழ் மக்கள் தொடர்பான எதிர்ப்பு நிலை சிங்கள மக்கள் மத்தியில் இருக்கிறது. ஆனால் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக ஒழுங்கான விசாரணையும் நடக்கவில்லை. வந்த தகவல்கள் எல்லாவற்றையும் தொகுத்து பார்க்கின்ற போது இந்த ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்பதற்காக தான் இந்த நிகழ்வு நடந்திருக்கிறது என்பது வெளியாகி இருக்கிறது. இதை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவே ராஜபக்சாக்கள் இதனை தங்களுக்கு சாதகமாக கொண்டு போவதில் கஷ்டம் இருக்கிறது.

இன்றைக்கு சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்சாக்கள் நிறைய அம்பலப்பட்டு போய் இருக்கிறார்கள். ஊழல் தொடர்பான விடயம், நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு மாற்றிய விடயம், உயிர்த்த ஞாயிறு பிரச்சனை எல்லாம் சேர்ந்து பலவீனமான நிலையில் தான் இருக்கிறார்கள். அவர்கள் பெருந்தேசியவாதத் திற்குள் அடைக்கலம் புகுவதற்கு கஷ்டமான ஒரு சூழ்நிலை தான் இருக்கிறது. இன்றைக்கு தென்னிலங்கையில் உள்ள பிரச்சனை என்னவென்றால், பெருந்தேசியவாதத்தை தூக்கி பிடிப்பதற்கு உதய கம்மன்பிலவை தவிர வேறு யாருமில்லை, விமல் வீரவன்ச அணியினர் கூட கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார்கள்.

சனல் 4 காணொளி மூலம் மேற்குலகத்தால் மற்றக் கட்சிகளுக்கும் ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் தேவை இல்லாமல் குழப்பினால் உங்களையும் நாங்கள் செயற்பட விடமாட்டோம் என்பதே அது. இந்த செய்தி மற்ற கட்சிகளுக்கு ஒழுங்காக விளங்கி இருக்கும். உதயகம்மன்பில மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. அவர் கொஞ்சம் முரண்டு பிடித்தால் அந்த குற்றச்சாட்டுகளையும் பெரிது படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. இவ்வாறான நிலைமைகள் அவர்களை ஒரு கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க கூடிய ஒரு சூழலை உருவாக்கும்.

ராஜபக்சாக்கள் கிழக்கிலே பிள்ளையானை வைத்து கொண்டு நகர்த்த முனைந்த செயற்பாட்டிற்கும் இன்றைக்கு பாரிய தடங்கல் ஏற்பட்டு இருக்கிறது. ஏனென்றால், சனல் 4 காணொளி ஊடாக பிள்ளையானும் இதிலே பயன்படுத்தப் பட்டிருக்கிறார் என்கின்ற செய்தி தெளிவாக வெளியில் வந்திருக்கிறது. இதை மீறி பிள்ளையான் மேலே வருவதற்கும் அவருக்கு பல நெருக்கடிகள் வரக் கூடியதான ஒரு சூழல் தான் இருக்கிறது. அவருக்கு சட்ட ரீதியாகவே பல பிரச்சனைகள் வரக் கூடிய வாய்ப்புக்கள் இருக் கின்றன. ஆகவே அவரினது அரசியல் எதிர் காலமும் நெருக்கடிக்கு உள்ளாக கூடிய சூழல் தான் உருவாகும். ஏனென்றால் அவரினது அரசியல் பலம் என்பது இரண்டு தான். ஒன்று, முஸ்லீம் எதிர்ப்பு மற்றது வடக்கு எதிர்ப்பு. இந்த இரண்டுமே பலவீனமாக கூடியதான சூழல் ஒன்று உருவாகலாம்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தக் கூடிய வலுவான ஒரு தமிழ் தலைமை கிழக்கில் வந்துள்ளது என்று சொல்லிவிட முடியாது. சாணக்கியனிடம் மொழியாற்றல் இருக்கிறதே தவிர அரசியல் ஆற்றல் இருக்கிறது என்று சொல்லி விட முடியாது. அவரின் நகர்வுகள் கூட இதிலே பெரிய வெற்றியை தந்தன என்று கூறவும் முடியாது. இருக்கின்ற நிலைமையில் கிழக்கின் தேசிய அரசியலை தக்க வைப்பதில் சாணக்கியனுக்கு ஒரு பாத்திரம் இருக்கின்றது என்பது உண்மை. ஆனால் பிள்ளையான் கிளப்பி விட்ட அந்த அலையை சமன் செய்ய கூடிய வகையில் சாணக்கியனின் செயற்பாடுகள் பெரிதாக உள்ளன என்று கூறிவிட முடியாது. எதிர் காலம் சரியான ஆட்களை உருவாக்கும் என்று நான் நினைக்கிறேன்.

(24ஆம் பக்க தொடர்ச்சி)

உறுப்பினர்கள், திருகோணமலையை சேர்ந்த அனைத்து நிறைவேற்று தர அதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டிருந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அடாவடியாக "மீண்டும் விகாரை கட்ட சம்மதம் தந்தால் மட்டுமே அங்கிருந்து செல்வோம்" என்று கூறி அங்கு அமர்ந்து கொண்டனர். கூட்டத்தைக் குழப்பி, ரகளை செய்து சம்மதத்தை எழுத்து மூலம் தர வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, எழுத்து மூலம் எழுதி வாங்கிச் சென்றனர். சாதாரண பொது மக்களுக்கு அல்லது ஊடகவியலாளர்களுக்கு கூட அனுமதி மறுக்கப்பட்டு இருக்கும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தினுள், இவ்வாறு பலாத்காரமாக புகுந்த நபரை காவல்துறை ஒன்றும் செய்யவில்லை. இங்கு இருப்பது "ஒரு நாடு பல சட்டங்கள்".

இந்த பிரச்சனைகளின் பின்னணியை எடுத்து நோக்கினால், மைத்திரிபால சிறீசேன தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது, "ஆயிரம் விகாரைகள்" செயல் திட்டத்தின் கீழ் பல புதிய விகாரைகள் அமைக்கப்படுமென கூறப்பட்டது. தமிழர்களின் தாயகம் என்று கூறப்படும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தொடு புள்ளியாக இன்று மீதமாக இருக்கும் ஒரு பகுதி திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு. இந்தப் பகுதி பௌத்த மயமாக்கப்படும் போது எதிர்காலத்தில் இணைந்த வடகிழக்கை தமிழர் தாயகமாக கூற முடியாத நிலை ஏற்படும். இதனை கவனத்தில் கொண்டு அரசும், சிங்கள பேரினவாதிகளும் நீண்ட நாள் திட்டத்துடன் குறித்த பகுதியில் சுமார் 33 விகாரைகளை அமைப்பதற்கான வேலைகளையும், அந்த விகாரைகள் ஊடாக விகாரைகளைச் சுற்றி உள்ள காணிகளை சுவீகரிப்பதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர். இது குறித்த பகுதியைச் சேர்ந்த "அரிசிமலைப் பிக்கு" என்பவரின் தலைமையில் பலவந்தமாக இடம்பெற்று வந்தது. இந்நிலையில் ஒரு சில விகாரைகள் அமைப்பதை நிறுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்ற போதும் அவை அமைக்கப்படுவது கொஞ்சம் காலதாமதம் ஆக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த தொடு புள்ளிகளின் இறுதித் தொடு புள்ளியாக திருகோணமலை நகரத்திலிருந்து சுமார் 6 கிலோமீட்டர் தூரத்தில் காணப்படும் சாம்பல்தீவு, சல்லி, ஆத்திமோட்டை, இலுப்பங்குளம், கோணேசபுரி, வள்ளுவர் கோட்டம், பெரியகுளம் போன்ற முழு தமிழ் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் காணப்படுகிறது. இப்பிரதேசத்தின் மத்தியில் காணப்படும், அதேவேளை சுற்றுலாத்தலமாகிய நிலாவெளிக்குச் செல்லும் பிரதான பாதையில் உள்ள பெரியகுளம் சந்தியில் ஒரு விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக முடுக்கி விடப்பட்டுள்ளன.

இதில் விசனப்பட வேண்டிய விடயம், குறித்த இடத்தில் விகாரை கட்டுவதற்கு முன்னிற்கும் பிக்கு ஒரு அரைத் தமிழர் என்பதாகும். "சுகிதவங்ச திஸ்ஸ தேரர்" என தன்னை அடையாளப்படுத்தும் இவர், திருக்கோணமலை திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த தமிழ் தாய்க்கும், சிங்கள தகப்பனுக்கும் பிறந்த ஒருவர். பிறப்பினாலேயே இரு இனங்களுக்குமிடையேயான முரண்பாடுகளை தீர்த்து வைக்கக்கூடிய பின்னணியை கொண்ட இவரே சிங்கள பௌத்த இனவாதத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு பலியாகிப் போனது அபாக்கியமானது.

எனினும், இலங்கை அரச நிகழ்ச்சி நிரலில் சர்வதேசத்தின் சில தலையீடுகள் காரணமாகவும், இந்திய அழுத்தம் காரணமாகவும் 13-ஆம் சீர்திருத்தத்தை நியாயப்படுத்தவும் ஆளுநராக கொண்டுவரப்பட்ட செந்தில் தொண்டமான் அவர்கள் குறித்த இடத்தில் இன முறுகல் ஏற்படும் என்ற அடிப்படையில் விகாரை அமைப்பதற்கு தற்காலிக தடை ஒன்றை ஏற்படுத்தினார். என்றாலும் 28.08.2023 நடந்த நிகழ்வுகள் செந்தில் தொண்டமானுக்கு, வடக்கு கிழக்கு தமிழர்களின் இன்னல் நிலையை புரிய வைத்துவிட்டது. உண்மையில் சொல்லப்போனால் திருக்கோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பிக்குகளின் ரகளையின் முன் செந்தில் தொண்டமான் எல்லா வித அதிகாரங்களையும் இழந்த ஒரு நிராயுதபாணியாக அவமானத்திற்கு உள்ளானார் என்பதே உண்மை.



உலகத்தில் புத்த பெருமானுக்கு "விகாரை" என்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலங்களுக்கு முந்திய காலகட்டத்தில் "சைத்தி" என்ற வடிவமைப்பு தான் அமைக்கப்பட்டது. அந்த வடிவமைப்பு முதன் முதலில் அமைக்கப்பட்டது, திருகோணமலையின் திரியாய் பகுதியில் காணப்படும் "கிரிகடு சாய" என இன்று அழைக்கப்படும் இடத்தில் என கூறப்படுகிறது. அதன் அடிப்படையில் அதனைச் சூழ இருக்கும் எல்லா மலைகளிலும் பௌத்த சுவடுகள் இருக்கும் என்ற எடுகோள் முன்னிறுத்தப்படுகிறது. அந்த அடிப்படையில் அதைச் சூழ இருக்கும் மலைகள் அனைத்தும் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இங்கே குறிப்பாக சொல்லப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், குறித்த சைத்தியை அமைத்தவர்கள் தமிழ் பௌத்தர்கள் என்பது தான். இந்த வரலாற்று உண்மையை ஏற்க பௌத்த பேரினவாதம் மறுக்கின்றது.

எங்களுக்கு ஏற்பட்ட இன்னோர் அபாக்கிய நிலை என்னவென்றால், பெரியகுளம் சந்தியில் காணப்படும் மலை மீது நாகம்பிரான் வழிபாடுகள் இருந்து வந்தன. அந்த பகுதியைச் சேர்ந்த ஒரு சில தமிழ் அரசியல் பலமிக்க நபர்கள் அந்த மலையில் புதையல் தோண்டும் நோக்கில் சில நடவடிக்கைகளை மேற்கொண்ட பொழுது, அங்கிருந்து நாகம்பிரான் சிலை அகற்றப்பட்டிருந்தது. இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களால் நியமிக்கப்பட்ட "தொல்பொருள் செயலணி" இந்த இடத்தையும் ஒரு தொல்பொருள் இடமாக கூறியது. அதனை மையப்படுத்தி சூழ இருந்த மூன்று ஏக்கர் காணிகளை தொல்பொருள் இடமாக வர்த்தமானி பிரசுரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் குறித்த பகுதி அளவீடு செய்யப்பட்டு, கையகப்படுத்தப்படாத நிலையில் திருகோணமலையின் பிரதேச செயலாளரினால் அந்தக் காணிக்கும், பிரதான வீதிக்கும் இடையில் மலை சரிவில் காணப்படும் 27 பேர்ச் காணி விகாரை அமைப்பதற்காக குறித்த பிக்குவுக்கு கையெழுத்திட்டு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அண்மையில் இருக்கும் தனியார் காணி ஒன்றும் தமிழ், சிங்கள கலப்பு குடும்பம் ஒன்றுக்கு சொந்தமானது. அந்த காணி உரிமையாளர்களும் குறித்த இடத்தில் பௌத்த விகாரை ஒன்று வருவதற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். இதன் அடிப்படையில் தொல்பொருள் நிலப்பகுதி, பௌத்த சாசனத்திற்கு வழங்கப்பட்ட அரச காணி, தனியார் காணி என மூன்று விதத்தில் காணிகள் பௌத்த மயமாக்கலுக்கு தயாராக உள்ளன. பல நூறு ஆண்டுகளாக வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் செறிவான பகுதி, இன்று அவர்களின் சதி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

**இவ்வாறான தமிழ் வரலாற்றுச் சுவடுகளை கொண்ட பகுதி இன்று பௌத்தமயமாக்கலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது. இவ்வாறான முறுகல் நிலைகளும், இனக் கலவரத்திற்கான ஆரம்பங்களும் அரசை மீண்டும் நடுத்தெருவுக்கு கொண்டு செல்லும்.**

இந்தப் பகுதியின் வரலாற்றை நோக்கும் போது, இன்றைய சாம்பல்தீவு, அடுக்குப்பார் மற்றும் கோணேசபுரி போன்ற பகுதிகள் மிந்தன் கொற்றன் என்ற தமிழ் பௌத்த அரண்மனை பிரதானிக்கு மன்னன் ஒருவனால் தன்னிடம் சேவை புரிந்தமைக்காக நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவுக்கு பின் 1153 ஆம் ஆண்டு இவ்வாறு வழங்கப்பட்டதாக "மாங்கனாய் கல்வெட்டு" என்ற கல்வெட்டு கூறுகிறது. மேலும், "இந்த பகுதிக்கு தீங்கு செய்பவர்களுக்கு துன்பம் நேரிடும்" என்று விநாயகர் மற்றும் வைணவ மரபில் வந்த புத்தர் மேல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு திருக்கோணமலை வரலாற்றின் நீண்டகால சுவடுகளைக் கொண்ட பிரதேசமாக இந்த பகுதி காணப்படுகின்றது. குறிப்பாக சாம்பல்தீவு என்ற பகுதி திருக்கோணேச்சரத்துடனும் தொடர்புடைய பகுதியாகவும் உள்ளது. திருக்கோணேச்சர ஆலயத்தில் யாகங்கள் செய்த போது அங்கிருந்து சாம்பல் கொண்டு வந்து கொட்டப்பட்ட பகுதியில் "சாம்பல்தீவு" என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான தமிழ் வரலாற்றுச் சுவடுகளை கொண்ட பகுதி இன்று பௌத்தமயமாக்கலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது.

முன்னைய ஆளுநர் அனுராதா ஜகம்பத் காலத்தில், சாம்பல்தீவு குடா பகுதியை மையப்படுத்தி, சுமார் 400 ஏக்கர் காணியை "கண்டல் நிலங்களை பாதுகாத்தல்" என்ற போர்வையில் கையகப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டது. சாம்பல்தீவு சந்தியில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு, அதற்கு காவலாக இரண்டு பொலிசார் நிற்க செய்யப்பட்டு, அரச பணம் வீணாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. செந்தில் தொண்டமானின் நியமனத்தில் பின் குறித்த காணி அபகரிப்பு சற்று ஓய்வுக்கு வந்துள்ளது.

அண்மைக்காலங்களில் ரணில் அரசாங்கம் இந்தியாவுடனான தனது நட்பு தளத்தை கையாள்வதற்கு திருகோணமலையை அடகு வைத்துள்ளது. இந்நிலையில், திருகோணமலையில் எரிசக்தி உட்பட சக்தி தொடர்பான செயல்திட்டங்களை இந்தியா சார்ந்து முன்னெடுக்க முயன்று வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில், இவ்வாறான முறுகல் நிலைகளும், இனக் கலவரத்திற்கான ஆரம்பங்களும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு பாதகமாக அமையும். பிக்குகளின் பிடிவாதம் அரசை மீண்டும் நடுத்தெருவுக்கு கொண்டு செல்லும்.

திருகோணமலை பெரியகுளம் சந்தியில் இன நல்லிணக்கத்தை குழப்பும் வகையில் அமைக்கப்படவிருக்கும் பௌத்த பொரலுகந்த ரஜ மகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழ் தேசிய பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டு 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று திருகோணமலை, சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் அடங்கலாக காலிமுகத்திடல் அரகலய போராட்டத்தின் தமிழ் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந், திருகோணமலை வாழ் பொதுமக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். பெரியகுள சந்தியில் அமைக்க திட்டமிடப்பட்டு இருக்கின்ற விகாரைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக திருகோணமலை சாம்பல்தீவு சந்தியில் எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த போராட்டத்தை தடுத்து நிறுத்தும் வகையில் திருகோணமலையின் நிலாவெளி

பிரிவு காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் திருகோணமலை நீதவான் நிதிமன்றினால் போராட்டத்தில் கல ந்து கொள்வதற்கு 14 பேருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த தடையுத்தரவை போராட்டக் களத்தில் வாசித்து போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு காவல்துறையினர் வற்புறுத்தினர். இதனால் நிலாவெளி காவல்துறை பிரிவினை தவிர்த்து அதற்கு அருகாமையில் திருகோணமலை உப்பு வெளி காவல்துறை பிரிவுக்குள் அடங்குகின்ற சாம்பல்தீவு பாலத்திற்கு அப்பால் சென்று போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்தார்கள். எனினும் இந்த போராட்டத்தில் திருகோணமலை தமிழரை பாராளு மன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் இருக் கையை வைத்திருக்கும் தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் கலந்து கொள்ளாமல் இருந் தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குறித்த பகுதியில் தமிழ் மக்கள் செறி வாக வாழ்வதனால் அந்தப் பகுதியில் தேவை யற்ற விதத்தில் விகாரை அமைப்பதன் மூலம் இன நல்லிணக்கத்தை குழப்ப வேண்டாம் என்ற தொனிப்பொருளில் போராட்டத்தில் பங் கேற்றவர்கள் கருத்துகளை முன்வைத்தனர். திருக்கோணமலை தமிழ் மக்கள் பல இன்னல் களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என் றும், எனினும் சரியான முறையில் தமிழ் தலைவர்களால் திருக்கோணமலை தொடர்பான விடய ங்கள் கையாளப்படுவதில்லை என்றும், திருக் கோணமலை மக்களை சரியான முறையில் ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தனர்.

இவ்வாறான அரச நிகழ்ச்சி நிரல் இனங் களுக்கு இடையேயான சமூக நிலையை குழப் புவதாக அமைந்துள்ளது. மேலும் 13 வது அரசியலமைப்புச் சட்டம் இனப்பிரச்சனைக்கு தீர்வு என்று சொல்லப்படுகிறது. அந்த சட்டத் தின் ஊடாக அதியுச்ச அதிகாரம் வழங்கப் பட்டிருக்கின்ற மத்திய அரசின் பிரதிநிதியான ஒரு மாகாண ஆளுநரின் அதிகாரம் கூட பிக்கு களுக்கு முன்னால் செல்லுபடி அற்றதாக காணப்படுவது இந்நிகழ்வு மூலம் தெளிவாக் கப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில் 13ஆம் திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வாக முடியும்?

பேரினத்தை சேர்ந்தவர் என்ற ஒரு தகுதியை மட்டும் வைத்துக் கொண்டு இல ங்கை ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியை அவமதித்து ஒருவர் தனக்கு வேண்டியதை பலாத்காரமாகப் பெற்றுக் கொண்டுள்ளார். அதே போன்று மற்றைய இன மக்கள் இந்த நாட்டில் செய்வதென்பது நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று. "ஒரு நாடு பல சட்டங்கள்."

## வாசகர்களே!

நிமிர்வு இதழை **www.nimirvu.org** இணையமூடாகவும் சமூக ஊடக பக்கங்களான **facebook.com/nimirvu** என்ற முகநூல் ஊடாகவும் **youtube.com** இல் **nimirvu** என்று தேடுவதனூடாகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.

இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம் **(noolaham.org)** இணையத்தின் ஊடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல் **(pdf)** வடிவில் வாசிக்க முடியும்.

# ஒரு நாடு பல சட்டங்கள்



ஆரணியன்

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக எல்லையில் காணப்படும் நூறு சதவீதம் தமிழ் மக்கள் வாழும் சாம்பல்தீவு, இலுப்பங்குளம், பெரியகுளம் கிராம சேவகர் பிரிவுகளின் மத்தியிலேயே பெரியகுளம் சந்தி அமைந்துள்ளது. அங்கு காணப்படும் முக்கியமான நிலப்பகுதி ஒன்று, "பொரலு கந்த ரஜமஹா விகாரை" என்ற பெயரால், ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இனவாத அரசியலின் கோர முகங்களை கண்ட திருகோணமலை, மீண்டும் கொதித்தெழ தொடங்கியுள்ளது. தமிழ் மக்களின் செறிவைக் குறைக்கும் ஆக்கிரமிப்பு செயற்பாடாகவே இது உள்ளது.

கடந்த 28.08.2023 அன்று திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் திருகோணமலையை சேர்ந்த "கோகர்ண பிக்குகள் அமைப்பு", மேலும் ஒரு சில சிங்கள இனவாதிகள் என்று சுமார் 20 பேர் கொண்ட குழு ஒன்று பாரிய ரகளை ஒன்றினை நடத்தியது. அவர்கள் இலங்கையின் சட்ட திட்டம், அரசியலமைப்பு என்பவற்றை சுக்கு நூறாக்கி, தங்களின் தேவையை சாதித்துக் கொண்டனர். திருகோணமலை - கொழும்பு பிரதான வீதியை பிக்குகள் மறித்து போக்குவரத்தை சுமார் 2 மணி நேரங்கள் பாரியளவில் தடை செய்தனர். இருந்த போதும், அவர்களை அகற்றி போக்குவரத்துக்கு வழி செய்ய காவல்துறையினர் கூட முன் வரவில்லை. இங்கு "ஒரு நாடு பல சட்டங்கள்".

அதன் பின்னர் திருகோணமலை மாவட்ட செயலகத்துக்குள் சென்ற பிக்குகள் அங்கு நடந்து கொண்டிருந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை பலாத்காரமாக இடை நிறுத்தினர். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை பாராளுமன்ற

(20ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 23.09.2023 அன்று வெளியிடப்பட்டது.